சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலத் துறை - 2023-2024-ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை - அறிவிப்பு எண்.4 - காட்டுப்பன்றி விரட்டி மருந்து (Wild Boar Repellent) 50 சதவிகித மானியத்தில் ரூ.45.00 இலட்சம் செலவில் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை-உழவர் நலத் (க1) துறை

அரசாணை (டி) எண்.102

நாள்: 04.05.2023
திருவள்ளுவராண்டு 2054,
சோபகிருது,
சித்திரை 21-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள், நாள் 05.04.2023.
2. முதன்மைச் செயலாளர்/ சர்க்கரைத் துறை ஆணையரின் கடித ந.க.எண்: 27766/கரும்பு-3/ 2023, நாள்: 12.04.2023.

.....

ஆணை:

2023-2024 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை-உழவர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

அறிவிப்பு எண் – 4

*"கரும்பு பயிரில் அதிக சேதம் ஏற்படுத்தும் காட்டுப் பன்றியினைக் கட்டுப்படுத்துவதற்காக, 2023-24 ஆம் ஆண்டில் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் காட்டுப்பன்றி விரட்டி மருந்து* (Wild Boar Repellent) *சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் 50 சதவிகித மானியத்தில் வழங்குவதற்காக 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்".*

2. மேலே 2-இல் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களின் கடிதத்தில், தற்போது கரும்பு வயல்களில் காட்டுப் பன்றிகள் புகுந்து பயிர்களை உண்பது மட்டுமின்றி காலால் மிதித்தும், கடித்தும் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன என்றும் காட்டுப்பன்றிகள் 6 – 12 மாதங்கள் வரையிலான கரும்புப் பயிரை அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன என்றும், பாதிக்கப்பட்ட கரும்பு

பயிர்களின் தூர்கள் வேரோடு பெயர்த்து எடுக்கப்படுவதால், கரும்பு வளர்ச்சி தடைபடுவதுடன் முழுமையாகக் காய்ந்து மகசூல் இழப்பு ஏற்படுகிறது என்றும், கரும்பு வயல்களில் 18 முதல் 50 சதவிகிதம் வரை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது என்றும், காட்டுப்பன்றிகளால் கரும்பு பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்தவும் விளைநிலங்களுக்குள் அவை வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்றும் ஆனால், வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டம், 1972-ன் கீழ் காட்டுப்பன்றிகளைக் கொன்று கட்டுப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. கரும்பு வயல்களில் நிரந்தரமாகக் குடியேறி இனப்பெருக்கம் செய்து பாதிப்பை ஏற்படுத்தும் இத்தகைய காட்டுப்பன்றிகளைத் தடுப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் (TNAU) உற்பத்தி செய்யப்படும் காட்டுப்பன்றி விரட்டி மருந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை வழி விரட்டியாக உள்ளதால், மேற்கண்ட காட்டுப்பன்றி விரட்டி மற்றும் இடுபொருட்கள் சர்க்கரை ஆலை நிதியிலிருந்து 50 சதவீத மானியத்தில் கரும்பு விவசாயிகளுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கிட முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத் துறை ஆணையர் அரசினைக் கோரியுள்ளார்:-

**<u>ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்படும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக காட்டுப்பன்றி விரட்டி மருந்து, தொடர்புடைய இடுபொருள்கள் மற்றும் மானிய விபரம்</u>**

| வ. எண் | இடுபொருள் | பரிந்துரைக்கப் படும் அளவு எக்டருக்கு | ஒரு அலகுக் கான தொகை ரூ. | ஒரு எக்டருக்கு மொத்த தொகை ரூ. | 50 சதவிகித மானியத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் (TNAU) உற்பத்தி செய்யப்படும் காட்டுப் பன்றி விரட்டி மருந்து | 5 லிட்டர் | ரூ.600/ லிட்டர் | 3000 | 1500 |
| 2 | கொள்கலன் மற்றும் இரும்பு கட்டுக்கம்பி | கொள்கலன் 400 எண்கள் இரும்பு கட்டு கம்பி தேவையான அளவு | 1500 | 1500 | 750 |
| | | | மொத்தம் | 4500 | 2250 |

<u>கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை வாரியாக பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு விபரம்</u>

| வ. எண். | கூட்டுறவு / பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் | பொருள் இலக்கு (எக்டர்) | நிதி இலக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | செய்யாறு | 320 | 7,20,000 |
| 2 | செங்கல்ராயன் | 200 | 4,50,000 |
| 3 | எம் ஆர் கே | 70 | 1,57,500 |
| 4 | சுப்பிரமணிய சிவா | 60 | 1,35,000 |
| 5 | கள்ளக்குறிச்சி 1 | 90 | 2,02,500 |
| 6 | கள்ளக்குறிச்சி 2 | 90 | 2,02,500 |
| 7 | மதுராந்தகம் | 300 | 6,75,000 |
| 8 | அமராவதி | 150 | 3,37,500 |
| 9 | தருமபுரி | 90 | 2,02,500 |
| 10 | திருப்பத்தூர் | 100 | 2,25,000 |
| 11 | சேலம் | 80 | 1,80,000 |
| 12 | வேலூர் | 150 | 3,37,500 |
| 13 | திருத்தணி | 150 | 3,37,500 |
| 14 | அறிஞர் அண்ணா | 50 | 1,12,500 |
| 15 | பெரம்பலூர் | 100 | 2,25,000 |
| | மொத்தம் | 2000 | 45,00,000 |

4. மேலே பத்தி 3-இல் உள்ள முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத் துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2023-2024 ஆம் ஆண்டில் காட்டுப்பன்றி விரட்டி மற்றும் இடுபொருட்களை ரூ.45.00 இலட்சம் (ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) செலவில் ஆலைகளின் சொந்த நிதியிலிருந்து கொள்முதல் செய்து, 50 சதவீத மானியத்தில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. காட்டுப்பன்றி விரட்டி மற்றும் இடுபொருட்கள் வழங்குவது தொடர்பாக இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறு முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத் துறை ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/ சர்க்கரைத் துறை ஆணையர்,
சென்னை-35.

நகல்
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின்
தனிச்செயலர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (வ & தி / அநமு-3) துறை, சென்னை-9.
கோப்பு எண்.4531688/க1/2023
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
04.5.2023

**இணைப்பு**

**அரசாணை (டி) எண்.102, வேளாண்மை-உழவர் நலத் (க1) துறை, நாள் 04.05.2023**

வழிகாட்டு நெறிமுறைகள்

1. கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் ஆலைகளுக்கு 2023-24 ஆம் ஆண்டில் கரும்பு பதிவு செய்யும் விவசாயிகளுக்கு மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.
2. பாதிக்கப்பட்ட / பாதிப்புக்குள்ளாகும் கரும்பு வயல்கள் கரும்பு உதவியாளரால் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும். கரும்பு அலுவலர் / கரும்பு பெருக்கு அலுவலர்களால் பரிந்துரை செய்யப்படவேண்டும்.
3. கரும்பு பயிரிடும் விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.
4. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் மேலாண்மை இயக்குநர் / தலைமை நிர்வாகிகள் மூலமாக திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.
5. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் (TNAU) உற்பத்தி செய்யப்படும் காட்டுப்பன்றி விரட்டி மருந்து, கொள்கலன் மற்றும் இரும்பு கட்டுக்கம்பி ஆகியவற்றை பொருள் இலக்கின் படி உரிய விதிமுறைகளைப் பின்பற்றி உரிய காலத்திற்குள் சர்க்கரை ஆலைகளால் ஆலை நிதியிலிருந்து முழுவிலையில் கொள்முதல் செய்யப்படவேண்டும்.
6. பரிந்துரை செய்யப்பட்ட விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.2250/- (50 சதவீத மானியத்தில்) இடுபொருள்கள் வழங்கப்படவேண்டும். இதற்குரிய செலவினங்கள் ஆலை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். பயனாளிகள் பங்குத் தொகையான 50 சதவீதம் சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் செலுத்தி மருந்து மற்றும் இடுபொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
7. தொடர்புடைய சர்க்கரை ஆலைகள் திட்ட செயல்பாடுகள் குறித்து மாத அறிக்கை சர்க்கரைத்துறை ஆணையருக்கு அனுப்பிட வேண்டும்.
8. மேலும், திட்ட செயல்பாடுகள் உரிய வகையில் ஆவணப்படுத்தப் படுவதோடு திட்ட முடிவில் காட்டுப்பன்றி விரட்டியின் பயன்பாட்டுத் திறனை ஆய்வு செய்து அறிக்கை தயாரித்து, சர்க்கரைத் துறை ஆணையருக்கு அனுப்பிட வேண்டும்.

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்